factor, will the Government desist from translating these Acts into Tamil ? Will the Government also issue instructions to the High Court that Tamil documents in suits to be given to the High Court should be translated in English ? Will the Government take action to instruct officers in this regard ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலிலே, நம்முடைய கனம் அங்கத்தினர் அவர்கள் தமிழிலே சட்டங்கள் கொண்டு வரப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அவ்வாறு தமிழிலே சட்டங்களைக் கொண்டு வரும்போது சிக்கல்கள் ஏற்படாதா என்று கேட்கிறார்கள். சிலம்பு செல்வரிடத்திலே பயிற்சி பெற்றவர் தமிழ் மொழியைப் பற்றி இவ்வாறு கருத்துக் கொண்டிருப்பது சரியல்ல. டில்லியில் இந்தியில்கூட லா ஜர்னல் போடத் தொடங்கி இருக்கிறார்கள். அந்த நிலையில் நம்முடைய தமிழில் முடியாது என்று கருதுகிறார்கள் ? இடைக்காலத்தில் ஏற்படக்கூடிய சங்கடங்களை தவிர்த்து தமிழிலே எல்லாவற்றையும் கொண்டு வர வேண்டு மென்பதுதான் திட்டம்.

கோவையில் உரத் தொழிற்சாலை

*** 317 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத்தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்—

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசாங்கத்திடம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மற்றப் பகுதிகளை விட அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு அங்கு விவ சாயம் செய்கிறார்கள். ஆகவே அந்த இடத்தில் அவர்களுக்கு ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுத்தால் போக்குவரத்துச் செலவும் குறை யும், அதோடு எளியமுறையில் அது கிடைக்கவும் வசதியாக இருக்கும். ஆகவே அதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உரத் தேக்கம் பற்றிதான் அரசாங் கம் கவலை கொண்டிருக்கிறது.

திரு. எம். பூபதி : கோவை காரமடையில் தனியார் நடத்தும் தொழிற்சாலையை விரிவுபடுத்த அவர்கள் அரசாங்கத்தைப் கோரியிருக்கிறார் களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

தாடகைநாச்சியம்மன் ஓடைத்திட்டம்

*** 318 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தாடகைநாச்சியம்மன் ஓடைத் திட்டத்திற்கு எஸ்டிமேட் (estimate) போடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் ஆதாயமற்றதாக இருந்தமையால் இத்திட்டம் பரிந்துரைக்கப்படவில்லை. இதன் செலவு குறைக்கப்படக்கூடும் என்பதை அறிய இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. பி. எஸ். மணியன் : இதுபோன்ற முக்கியமான திட்டங்களை நிறைவேற்றுகிற காலத்தில் ஓவர் எஸ்டிமேட் என்ற காரணத்தைக் காட்டி தள்ளிவிடுகிறார்கள். ஆகவே இதுபோன்ற திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை செயல்படுத்தும் முறையில் சட்டத்தை தளர்த்துவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கெனவே குறிப்பிட்டது போல் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள்.

* 319 **வினா—திரு. கே. போஜன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திலுள்ள நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் என்றும், மாநில நெடுஞ்சாலைகள் என்றும் எந்த அடிப்படையில் பிரிக்கப் பட்டிருக்கின்றன?

(இ) இந்த தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்புக்காக மத்திய சர்க்கார் ஏதேனும் உதவித் தொகை அளிக்கின்றதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) சாலைகள் (i) தேசிய நெடுஞ்சாலைகள் எனவும் அதாவது படைப்போக்குவரத்துக்கு அவசியப்படுகிற சாலைகள் உட்பட பெரிய துறைமுகங்கள் வெளிநாட்டு நெடுஞ்சாலைகள், மாநிலங்களின் தலைநகரங்கள் ஆகியவற்றை இணைத்து இந்தியா வெங்கும் உள்ள முதன்மையான நெடுஞ்சாலைகள் எனவும்,

(ii) மாநில நெடுஞ்சாலைகள் எனவும், அதாவது மாநிலத்தின் ஏனைய முதன்மையான பெருவழிகள் அல்லது உயிர்நாடி போன்ற நெடுஞ்சாலைகள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய அரசுக் சட்டளைக் கிணங்க 1943-ல் நாகபுரியில் நடைபெற்ற மத்திய மாநில அரசாங்கங்களின் தலைமைப் பொறியாளர்கள் மாநாட்டுப் பரிவுரைகளின் அடிப்படையிலே இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) & (உ) : ஆம். நகர எல்லைக்குள் அமைந்த பகுதிகளைத் தவிர தேசிய நெடுஞ்சாலைகளுக்காகும் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. நகர எல்லைக்குள் அமைந்த பகுதிகளுக்கு மைல் ஒன்றுக்கு ரூ. 5,000 அல்லது நடைமுறையில் ஏற்படும் பேணுதல் செலவுகள் இவற்றில் எது குறைந்ததோ அந்த வீதப்படி மானியம் வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

திரு. கே. போஜன் : நம் மாநிலத்தில் இவ்வித தேசிய நெடுஞ்சாலைகள் எவ்வளவு மைல் அல்லது எவ்வளவு கிலோ மீட்டர் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசிய நெடுஞ்சாலைகள் பம்பாய்—சென்னை சாலை 78மைல் ; கல்கத்தா—சென்னை 28 மைல் 3 பர்லாங் : வாரணசி—கன்னியாகுமரி 405 மைல் ; சென்னை திருச்சி—திண்டுக்கல் 257 மைல் 5 பர்லாங் ; ராணிப்பேட்டை—கிருஷ்ண கிரி 89 மைல், $5\frac{1}{4}$ பர்லாங் ; சேலம்—கொச்சி 111 மைல், 6 பர்லாங் ; மதுரை—தனுஷ்கோடி 93 மைல் 3 பர்லாங். கூட்டிப்பார்த்தால் மொத்தம் தெரிந்து கொள்ளலாம்.